**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**Pr.O.P.No.86/2020**

25.07.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.தீ.சுகந்தமாலா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

மனுதாரர் சாட்சி 1 ஹரிராம் த/பெ.மாணிக்கம்: 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

இந்த மனு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பா எனக்கு எழுதி வைத்த உயிலை அமல்படுத்த தாக்கல் செய்துள்ளேன். 2ம் எதிர்மனுதாரர் மேனகா எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் மூத்த சகோதரி. எனக்கும் அவருக்கும் சுமூகமான உறவு தான் என்றால் எனக்கும் அவருக்கும் பேச்சுவார்த்தை இல்லை. எனக்கும் அவருக்கும் என்ன கருத்துவேறுபாடு என்றால் எங்களுக்குள் கருத்துவேறுபாடு எதுவும் இல்லை. 2ம் எதிர்மனுதாரர் மேனகா எந்த ஊரில் இருக்கிறார் என்றால் அவர் அஸ்ஸாம் மாநிலத்தில் ராணுவத்தில் பணிபுரிகிறார்.

என் தந்தை எழுதிவைத்ததாக கூறும் உயில் எழுதும் சமயத்தில் நான் பக்கத்தில் இருந்தேனா என்றால் இல்லை. உயில் ஆவணம் பற்றி எனக்கு நேரில் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.15 என் தந்தை உயில் பற்றி எனக்கு முதன்முதலில் எப்போது தெரியவந்தது என்றால் 2019ம் வருடம் தெரியவந்தது. என் தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் 12.12.2004ம் தேதியில் இறந்தார். மேற்படி உயில் ஆவணம் பற்றி எனக்கு யார் மூலமாக தெரியவந்தது என்றால் நான் வீட்டை சுத்தம் செய்த போது அந்த உயில் கிடைத்தது. நான் மனுவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் மேற்படி உயில் 2019ம் ஆண்டு வீடு சுத்தம் செய்த போது கிடைத்தது என்று கூறியுள்ளேனா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை.

எத்தனை அயிட்ட சொத்துக்கள் சம்மந்தமாக இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஏ ஷெட்யூலில் 2 அயிட்டங்களும், பி ஷெட்யூலில் 6 அயிட்டங்களும் காட்டியுள்ளேன். (மனுவை வாங்கி பார்த்தபின்பு சாட்சி எத்தனை அயிட்டங்கள் என்று கூறினார்). மேற்படி சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் ஏ ஷெட்யூல் சொத்துக்களின் சர்வே எண்கள் 508/2 மற்றும் 50/3 ஆகும். (பின்னிட்டு சாட்சி சர்வே எண்கள் சரியாக ஞாபகம் இல்லை என்று கூறினார்). எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரனம் பூமி உள்ளது என்று தெரியுமா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. மனு சொத்துக்களில் ஒவ்வொரு அயிட்ட சொத்துக்களின் 4 புற எல்லைகள் என்னால் கூறுமுடியுமா என்றால் எல்லைகள் எனக்கு ஞாபகம் இல்லை.

2019ல் எனக்கு கிடைத்ததாக கூறும் உயில் ஆவணம் என் தந்தையாரால் கைப்பட எழுதப்பட்ட உயில் ஆவணமா என்றால் அது எனக்கு தெரியவில்லை. என் அம்மா இருக்கிறாரா என்றால் இருக்கிறார், என் அம்மா பெயர் மல்லிகா. அந்த உயில் என் தந்தை எந்த தேதியில் எழுதிவைத்ததாக கூறுகிறேன் என்றால் 16.02.2004 தேதியில் எழுதிவைத்துள்ளார். பொன்பத்தி கிராமம் விஜயா எனக்கு என்ன உறவுமுறை என்றால் அவர் என் அம்மாவின் உடன்பிறந்த தங்கை ஆவார். பொன்பத்தி கிராமம் கன்னியப்பன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் அவர் என் சித்தப்பா, அதாவது என் சித்தி விஜயாவின் கணவர் ஆவார். என் அப்பா எழுதிவைத்ததாக கூறும் உயில் பற்றி என் அம்மாவிற்கு தெரியுமா என்றும் என் அம்மாவிற்கு எப்போது அந்த உயில் பற்றி தெரியவந்தது என்று அவரிடம் கேட்டேனா என்றும் கேட்டால் நான் என் அம்மாவிடம் இது பற்றி கேட்கவில்லை, என் அப்பா 2004ம் ஆண்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்ற போது என் அம்மாவிடம் மேற்படி மசாஆ.15 உயிலை என் அப்பா என் அம்மாவிடம் கொடுத்துவிட்டதாக என் அம்மா தெரிவித்தார். 2004ம் ஆண்டு முதல் 2019ம் ஆண்டு வரை அந்த உயில் என் அம்மாவின் பொறுப்பில்

இருந்ததா என்றால் இருந்தது. 2019ம் ஆண்டு உயிலை பார்த்தபிறகு தாக்கல் செய்துள்ள இந்த மனுவிலும் என் பிரமாண வாக்குமூலத்திலும் அந்த உயிலின் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ள நபர்களின் பெயர் மற்றும் அவர்களின் உறவுமுறை பற்றிய விவரம் பற்றி கூறியுள்ளேனா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் நான் கூறிய தகவல்கள் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்று தெரிந்துகொண்டு அதில் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம்.

1ம் எதிர்மனுதாரர் செந்தாமரை என் அப்பாவிற்கு என்ன உறவுமுறை என்றால் அவர் என் அப்பாவின் மகள். என் அப்பா மாணிக்கம் மற்றும் வெள்ளச்சி அம்மாள் ஆகியோருக்கு பிறந்தவர் தான் 1ம் எதிர்மனுதாரர் செந்தாமரை என்றால் ஆமாம். மேற்படி வெள்ளச்சி அம்மாள் மற்றும் செந்தாமரை பற்றி நான் மனுவில் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். வெள்ளச்சி அம்மாள் எப்போது காலமானார் என்று தெரியுமா என்றால் 10.05.1990 தேதியில் காலமானார் என்று கேள்விபட்டேன். அவருடைய மரணம் இயற்கையானதா அல்லது அகாலமரணமா என்று எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

மனுசொத்துக்கள் எந்த வகையில் என் தந்தை மாணிக்கத்திற்கு பாத்தியம் என்று தெரியுமா என்றால் கிரைய வகையில் பாத்தியம் என்று உயிலில் எழுதப்பட்டுள்ளது மூலம் தெரிந்துகொண்டேன். மனு சொத்துக்களின் பட்டா தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. 10.11.2017 தேதியில் வட்டாட்சியர் பிறப்பித்துள்ள பட்டா மாறுதல் உத்தரவு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 10.11.2017 தேதிய உத்தரவு படி பட்டாவில் 1ம் எதிர்மனுதாரர் செந்தாமரையின் பெயரும் சேர்க்கப்பட்டு கூட்டுபட்டாவாக உள்ளது என்றால் ஆமாம். என் தந்தை மாணிக்கத்திற்கு எவ்வளவு சொத்துக்கள் பூர்வீகமாக இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம்

எதிர்மனுதாரர் செந்தாமரைக்கு எப்போது திருமணம் ஆனது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.